Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.55/2021 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.1 |
| Name: | திருமதி.தேவி |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 21.02.2024. | |

**1, 2 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை** : நேரம் : 11.53

நான் தற்போது சங்கராபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அட்டை மில்லில் கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் இருந்து வந்தார். கடந்த 09.11.2018 ம் தேதி நான் விறகு வெட்டுவதற்காக காலை 09.00 மணி போல் STA ஜார்ஜ் பின்புறம் உள்ள கிரவுண்டில் நடந்து சென்றேன். நான் பின்னர் எனது கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் மாலை 04.30 மணிக்கு வீட்டிற்கு வந்து விட்டேன். பின்னர் மாலை 05.30 மணியளவில் ஜெயராணி என்பவர் போன் செய்து கிரவுண்டில் விளையாடிக்கொண்டிருந்த எனது மகன்

நிதீஷ்குமாருக்கு தீ விபத்து ஏற்பட்டு கருகி கிடப்பதாக கூறினார்.

2) நான் உடனே அங்கு சென்று பார்த்த போது எனது மகனுக்கு முகம், நெஞ்சு, கால் முட்டி ஆகியவை கருகி எரிந்திருந்தது. எனது மகனுடன் விளையாடிய பாலகண்ணன், பாண்டித்துரை ஆகியோருக்கும் தீ காயம் ஏற்பட்டிருந்தது. பாண்டித்துரைக்கு முகம் முழுவதும் வெந்திருந்தது, உடல் முழுவதும் வெந்திருந்தது. பாலகண்ணனுக்கு முகம், கால், கை, நெஞ்சு ஆகிய பகுதிகளில் தீ காயம் இருந்தது. நான் உடனே மூவரையும் உப்பத்தூர் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அங்கிருந்து என்னை கோவில்பட்டி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

3) கோவில்பட்டி மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது பாலகண்ணனையும், பாண்டித்துரையும் திருநெல்வேலி மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல கூறினார்கள். எனது மகன் நிதீஷ்குமாரை கோவில்பட்டி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துக்கொண்டார்கள். எவ்வாறு தீ விபத்து ஏற்பட்டது என்று விசாரித்த போது மணி என்பவர் கிரவுண்ட் பக்கத்தில் வெடி மருந்து குடோன் வைத்துள்ளார். ரவி என்பவரும், மணியும் மருந்தை கொண்டு வந்து சிறுவர்கள் விளையாடும் கிரவுண்டில் கொட்டியுள்ளார்கள். இதை கவனிக்காமல் சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்த போது மருந்தை மிதித்து தீ பரவி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன்.

4) நான் மருத்துவமனையில் இருந்த போது அங்கு போலீசார் வந்தார்கள். அப்போது எனது மகன் கருகிய நிலையில் இருந்ததால் நான் புகார் கொடுக்கவில்லை. பின்னர் 11.11.2018 ம் தேதி சாத்தூர் தாலுகா காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். அந்த புகார் என்னிடம்

காட்டப்படும் ஆவணம் தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் அ.சா.1/அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மணி, ரவி ஆகியோரை எனக்கு அடையாளம் தெரியும். அவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆஜர் எதிரிகள் தான். ( **சாட்சி எதிரிகள் இருவரையும் குறிப்பிட்டு அடையாளம் காட்டுகிறார்.** ) இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எ.த.கு.வி.

1) நான் படிக்கவில்லை. சம்பவம் நடைபெற்று 3 வது நாள் தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் அப்போது எனது மகன் கருகியிருந்தான். அதை பார்த்து அலறி நான் மன உடைந்து இருந்தேன், அதனால் 11 ம் தேதி புகார் அளித்தேன். அ.சா.ஆ 1 புகாரை போலீசார் எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. புகாரை எனது மகன் தேவா எழுதினான். புகாரை எனது மகன் எழுதியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரை நான் சொல்ல, சொல்ல எனது மகன் எழுதினான்.

2) 1 வது எதிரி மணி சம்பவ இடத்தை ஒட்டி ஆட்டுப்பண்ணை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அங்கு ஆட்டுப்பண்ணை கிடையாது , குடோன் தான் உள்ளது. அவ்வாறு ஆட்டுப்பண்ணை உள்ளதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும் 1 வது எதிரியின் குடோனுக்கும் இடையே இரண்டு புஞ்சை காடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் விசாரணையில் உப்பத்தூர் மருத்துவமனைக்கு சென்றதாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

3) சம்பவம் தீபாவளி முடிந்து 3 நாட்கள் கழித்து நடைபெற்றது என்றால்

சரிதான், 09.11.2018 ம் தேதி நடந்தது. சம்பவம் நடைபெற்ற கிரவுண்டில் சிறுவர்கள் வெடி வெடிப்பார்கள் என்றால் சரியல்ல. தீபாவளியை முன்னிட்டு சிறுவர்கள் கிரவுண்டில் வெடி வெடித்த கழிவுகள் அங்கு கிடந்தததில் சிறுவர்கள் ஓடி விளையாண்ட போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1 வது எதிரி சம்பவத்தின் போது அவரது காட்டில் பருத்தி பயிரிட்டுயிருந்தார் என்றாலும், சிறுவர்கள் பந்தை காட்டுக்குள் அடிப்பதால் சத்தம் போடுவார் என்றாலும் சரியல்ல. அப்போது அவரது காடு தரிசாக தான் இருந்தது. தற்போது தான் பருத்தி வைத்துள்ளார்.

4) 1 வது எதிரி பந்து காட்டில் அடிப்பதால் சிறுவர்களை சத்தம் போட்டதால் அவரை பொய்யாக இந்த வழக்கில் சேர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் இடம் அருகில் ஆட்டுப்பண்ணை தான் இருந்தது என்றாலும், எனது மகனுக்குஇழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதால் மருந்து குடோன் இருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் இடம் அருகில் எந்தவிதமான பட்டாசு உற்பத்தியோ, விற்பனையோ, குடோனோ கிடையாது என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் பட்டாசுகளை கிரவுண்டில் போடவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.55/2021 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.2 |
| Name: | திருமதி.ஜெயராணி |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 21.02.2024. | |

**1, 2 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை** : நேரம் : 12.26

நான் தற்போது சங்கராபுரம் புதுகிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு ஒரு பெண் குழந்தை மற்றும் இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளார்கள். கடந்த 09 ம் தேதி, 11 மாதம் சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக வருடம் ஞாபகம் இல்லை, ரவி மற்றும் மணி ஆகியோர் சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடும் கிரவுண்ட் அருகில் உள்ள குடோனில் வெடி மருந்துகளை வைத்திருந்தார்கள். மேற்படி வெடி மருந்தை ரவியும், மணியும் சாக்கில் வைத்து சிறுவர்கள் விளையாடும் புஞ்சையில் தூத்திவிட்டார்கள். நான் விறகு பொருக்க சென்ற போது

பார்த்தேன். நான் விறகு பொருக்கிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் சிறுவர்கள் கிரவுண்டிற்கு சென்றார்கள். எனது மகன் பாண்டித்துரை, பாலகணேஷ், நிதீஷ்குமார் ஆகியோரும் விளையாடச் சென்றார்கள்.

2) அப்போது அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது அங்கு கொட்டி கிடந்த மருந்து வெடித்துவிட்டது. அதில் எனது மகன் பாண்டித்துரைக்கு நெஞ்சுக்கு மேல் முழுவதும் வெந்திருந்தது. கையிலும், உயிர் தடத்திற்கு கீழும், கால் முழுவதும் வெந்திருந்தது. பாலகணேஷ் மற்றும் நிதீஷ்குமாருக்கு உடம்பிலும், முகம், நெஞ்சு ஆகிய பகுதிகளில் தோல் உரிந்திருந்தது. எனது வீட்டுக்கு அருகில் வசிக்கும் ராஜேந்திரன் என்பவர் எனது மகனை வீட்டில் கொண்டு வந்து விட்டார். எனது மகனை பார்த்ததும் எனக்கு மயக்கம் வந்துவிட்டது. பின்னர் உப்பத்தூர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு உள்ள மருத்துவர் கோவில்பட்டி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். கோவில்பட்டி மருத்துவர் எனது மகனையும், பாலகணேஷ்சையும் திருநெல்வேலி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். போலீசார் ஊருக்கு வந்து விசாரித்த போது நான் மயக்கமாக இருந்தேன். எனது மகனை விசாரித்துள்ளார்கள். சம்பவம் தொடர்பாக ஜான்சிராணி போலீசார் விசாரணையில் கூறியுள்ளார். ரவி மற்றும் மணியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். அவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆஜர் எதிரிகள் தான். ( **சாட்சி எதிரிகளை குறிப்பிட்டு அடையாளம் காட்டுகிறார். )** ரவி வேனில் மருந்தை கொண்டு வந்தார். ரவியும், மணியும் மருந்தை தூவினார்கள்.

எ.த.கு.வி.

1) வெடி விபத்தை ராஜேந்திரன் என்பவர் சொல்லித்தான் தெரியும் என்றால் நான் நேரில் பார்த்தேன், என் வீட்டில் இருந்து பார்த்தால் சம்பவ இடம் தெரியும். சம்பவம் இடம் அருகில் 1 வது எதிரி மணிக்கு ஆட்டுப்பண்ணை தான் இருந்தது , வெடி மருந்து குடோன் இல்லை என்றால் சரியல்ல. கிரவுண்ட் உள்ள புஞ்சையும், 1 வது எதிரியின் புஞ்சையும் அருகே, அருகே உள்ளது. அங்கு உள்ள ஓடையில் தான் குப்பை போடுவார்கள் என்றால் சரியல்ல. சிறுவர்கள் தீபாவளிக்கு வெடி போட்டு அந்த குப்பைகள் அங்கு கிடந்தது என்றாலும், அதனால் தான் தீ விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

2) எதிரிகள் மருந்தை கொட்டிய போது அவர்களிடம் எதுவும் கேட்டீர்களா என்றால் சிறுவர்கள் விளையாடும் இடத்தில் மருந்தை போடதீர்கள் என்று சொன்னேன் அதற்கு அவர் அப்படி தான் போடுவேன் என்று கூறினார். மேற்படி சங்கதியை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரிகளிடம் மருந்தை தூவாதீர்கள் என்று நான் கூறவில்லை என்றாலும், எதிரிகள் மருந்து எதையும் தூவவில்லை என்றாலும் , அவ்வாறு நான் எதிரிகளிடம் தூவாதீர்கள் என்று கூறியிருந்தால் அதை நான் போலீசார் விசாரணையில் கூறியிருப்பேன் என்றாலும் சரியல்ல.

3) 1 வது எதிரி சம்பவம் இடம் அருகில் ஆட்டுப்பண்ணை தான் வைத்திருந்தார் என்றாலும், பட்டாசு குடோன் எதுவும் வைத்திருக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் சம்பவம் இடம் அருகில் எந்தவிதமான பட்டாசு உற்பத்தியோ, விற்பனையோ, குடோனோ கிடையாது என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் பட்டாசுகளை கிரவுண்டில் போடவில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும்

சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் சம்பவத்தில் பாதிக்கப்பட்டதால் இந்த வழக்கில் மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் தீபாவளி முடிந்து 3 நாட்கள் கழித்து நடைபெற்றது என்றால் சரிதான். தீபாவளிக்கு வெடி வெடித்த பட்டாசு கழிவுகள் அங்கு கொட்டி கிடந்ததில் சிறுவர்கள் விளையாடிய போது மிதித்ததால் தீ விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, COURT, SATTUR.

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No.CC.55/2021 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW.3 |
| Name: | திருமதி.கவிதா |
| Father's/Husband Name: | |
| Village: | |
| Taluk: | |
| Caste: | |
| Calling: | |
| Religion: | |
| Age: | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969(Central Act 44 of 1969) on the day of 21.02.2024. | |

**1, 2 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.**

**முதல் விசாரணை** : நேரம் : 12.52

நான் தற்போது சங்கராபுரம் புதுகிராமத்தில் குடியிருந்து வருகிறேன். காட்டு வேலை செய்து வருகிறேன். கடந்த 09.11.2018 ம் தேதி காலை 09.00 மணியளவில் காட்டு வேலைக்கு சென்ற போது STA சர்ச்க்கு பின்னால் உள்ள சிறுவர்கள் விளையாடும் கிரவுண்ட் வழியாக சென்ற போது மணி என்பவர் மருந்தை போட்டு கொண்டிருந்தார். ரவி என்பவர் தான் வேனில் மருந்தை கொண்டு வந்து இறக்கினார். அ.சா.1 தேவியும் என்னுடன் காட்டு வேலைக்கு வந்திருந்தவர் 1 மணி நேரம் முன்னதாகவே வீட்டிற்கு சென்றுவிட்டார். நான் , ஜெயராணி, பாக்கியம், ஜான்சிராணி

ஆகியோர் வேலை முடிந்து வரும் போது விறகு பொருக்கிக் கொண்டிருந்தோம். அப்போது கிரவுண்டில் டம் என்று சத்தம் கேட்டது. சிறுவர்கள் கத்தினார்கள் , நாங்கள் பார்த்த போது சிறுவர்கள் கருகி கிடந்தார்கள். அந்த இடத்தில் தீ போல வந்தது. டம் என்று சத்தம் கேட்டது சிறுவர்கள் கருகி கிடந்தார்கள். நாங்கள் அங்கு சென்று காயம்பட்ட சிறுவர்களான நிதீஷ்குமார், எனது மகன் பாலகணேஷ், பாண்டித்துரை ஆகியோரை உப்பத்தூர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம்.

2) உப்பத்தூர் மருத்துவமனை மருத்துவர் கோவில்பட்டி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல கூறினார். உப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்த ஆம்புலன்ஸ் மூலம் கோவில்பட்டி மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையில் இருந்து கோவில்பட்டி புதுக்கிராமம் என்று நினைத்து அந்த போலீசுக்கு தகவல் கூறிவிட்டார்கள். பின்னர் உப்பத்தூர் புதுக்கிராமம் என்று நாங்கள் கூறியவுடன் சாத்தூர் தாலுகா காவல்நிலையத்திற்கு தகவல் கூறினார்கள். எனது மகன் பாலகணேஷ்க்கு முகம் முழுவதும் வெந்திருந்தது. கழுத்து, வலது புற நெஞ்சு மற்றும் தொடைக்கு கீழ் தீ காயம் இருந்தது. நிதீஷ்குமாருக்கு முகத்திலும், கை, கால்களிலும் தீ காயம் இருந்தது. பாண்டித்துரைக்கு இரண்டு கைகளும் வெந்துவிட்டது. முகத்திலும், கால்களிலும் தீ காயம் ஏற்பட்டது.

3) பாலகணேஷ் மற்றும் பாண்டித்துரையை கோவில்பட்டி மருத்துவமனையில் இருந்து திருநெல்வேலி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்பந்தமாக அ.சா.1 தேவி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். ரவிக்குமார் மற்றும் மணி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆஜர் எதிரிகள் தான். ( **சாட்சி எதிரிகளை குறிப்பிட்டு**

**அடையாளம் காட்டுகிறார்**. ) இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எ.த.கு.வி.

1) 1 வது எதிரி மணி எனக்கு தூரத்து உறவினர். 2 வது எதிரி ரவிக்குமார் பக்கத்து ஊர்க்காரர் அவரை எனக்கு தெரியும். மணி அவரது காட்டில் ஆட்டுப்பண்ணை கட்டிக்கொண்டிருந்தார் என்றால் குடோன் கட்டி வெடி வேலை செய்து கொண்டிருந்தார். தீபாவளி கழித்து சிறுவர்கள் வெடி வெடித்து அந்த கழிவுகள் அங்கு கிடந்தது என்றாலும், அதில் விளையாடிய சிறுவர்கள் மிதித்ததால் தீ விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. 1 வது எதிரி காட்டிற்குள் சிறுவர்கள் செல்வார்கள் என்றாலும், 1 வது எதிரி சத்தம் போடுவார் என்றாலும் சரிதான். 1 வது எதிரி அவரது காட்டில் குடோன் வைத்து வெடி வேலை செய்து வந்தார். அதை சிறுவர்கள் பார்த்து வெளியே சொல்லிவிடுவார்கள் என்று விரட்டுவார்.

2) 1 வது எதிரி சிறுவர்களை விரட்டுவதால் 1 வது எதிரி மீது உள்ள கோபத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் எனது மகன் பாதிக்கப்பட்டதால் இழப்பீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரிகள் வெடி மருந்து எதையும் கொட்டவில்லை என்றால் சரியல்ல.